போதகர்களும் மதுவிலக்கும்.

சென்ற மாதத்துத் தூதனில், கிறிஸ்தவ சபைகளில் பிரபல்ய மடைந்திருக்கும் குடியென்னுங் கேட்டை நிவிர்த்திக்கப் போதகர்கள் முயலவேண்டுமென்று நாம் வற்புறுத்தினதைக் கவனித்து, இரண்டொரு நண்பர்கள், நமது சபைகளின் தற்கால நிலைமையைப்பற்றி நமக்கெழுதியிருக்கிறார்கள். விசேஷமாய்ச் சென்னையிலுள்ள சபைகளில் குடிவெறி பலமாய் ஆளுகை செய்கிற தென்பதைக் கவனிக்க எவ்வளவு சஞ்சலமாயிருக்கிறது! நமது கடித நேயர்கள் சில சபைகளையும் அவைகளின் போதகர்களையுங் குறிப்பிட்டு அவர்களின் அவலக்ஷணமான குடி கிறிஸ்து மார்க்கத்துக்கு அவமானத்தை யுண்டுபண்ணுகிறதென்று காட்டியிருக்கிறார்கள். சில முகாந்தரங்களை முன்னிட்டு நாம் அக்கடிதங்களைப் பிரசுரியாமல் தவிர்க்கிறோம். சென்னைக்குள் தங்கள் தென்னந்தோப்புகளைக் கள்ளிறக்க விடுகிற கிறிஸ்தவ தேவ ஊழியக்காரருண்டென்றும், புருஷனும் மனைவியுமாய்க் குடித்து வீட்டையும் பிள்ளைகளையும் அபாரமான தரித்திர நிலைமையிலே வைத்து மற்றவர்கள் பழிக்குமாறு உண்மைத் தாழ்ச்சியாய் நடந்துகொள்ளுகிற தமிழ்ச் சபைப் போதகர்களுண்டென்றும் கேள்விப்படுகிறோம். சபையை நடத்தும் ஆவிக்குரிய தலைவர்களே இவ்வாறிருப்பதானால் அந்தச் சபைகள் என்ன நிலையிலேயிருக்கு மென்பதை நாமெடுத்துக் கூற வேண்டுவதில்லை. கல்விக் கேள்வியும் சகல நாகரீகமும் நிறைந்த இந்தப்பெரிய பட்டணத்தின் சபைகளே இவ்வாறிருந்தால் கிராமாந்தரங்களிலும் பட்டிக்காடுகளில் அறிவீன ஜனங்கள் மத்தியிலுமிருக்கும் சபைகள் எவ்வாறிருக்குமோ அறியக் கூடவில்லை. ஒருவேளை கிராமாந்தர சபைகள் சென்னையிலுள்ள சபைகளடைந்திருக்கிற நாகரீக மடைந்திராததால் அவைகளிலிப்படிப்பட்ட குடிக்கேடு இருக்கமாட்டாதென்றும், சென்னை சகல நாகரீகங்களுக்கும் உறைவிடமாயிருத்தலால் இங்குள்ள சபைகள் தலைமுதல் அடிவரையில் நாகரீகக்குடியில் பிரசித்த மெய்தியிருக்கிறதென்றுஞ்சொல்லலாம்போலும். இந்த அவலக்ஷணமான பாவம் எப்போது நமது சபைகளைவிட்டு நீங்கப்போகிறது? நமது போதகர்மாரும் சபையாரும் குடியென்னும் பேயின் வாயினின்று எப்போது விடுபட்டுத் தூய்மை யடையப்போகிறார்கள்? சீக்கிரத்திலே அவ்வித காலத்தைக் கர்த்தர் கட்டளை யிடுவாராக. இங்கிலண்டிலும், மற்ற மேல்நாடுகளிலும் இப்போது கர்த்தர் ஒரு புதிய எழுச்சியையுண்டாக்கியிருக்கிறார். கிறிஸ்து சபையின் தலைவராயிருக்கிறவர்களுக்குள், சபைகள் மதுபான அசுசியினின்று தூய்மையடைய வேண்டுமென்று ஒரு ஆவலையுண்டுபண்ணி யிருக்கிறார். ஆங்கிலிகன் சபைத்தலைவர்களுள் அநேகர் இப்போ தெழும்பிச் சபையைத் தூய்மைப்படுத்தமுயன்றிருக்கிறார்கள். சில நாளைக்குமுன்னே யார்க் ஆர்ச் பிஷப் இது விஷயமாய்ச்சொன்னதைக்கவனியுங்கள்;— "குடியின் பயங்கரமான தீமையை இந்நாட்டில் அறியாதவர்களுண்டோ? இந்தக் கொடிய சத்துருவை மடங்கடிக்க கிறிஸ்து

சபை முற்பட்டு நில்லாமல் எவ்வளவு காலம் சும்மாவிருக்கப்போகிறது? இதற்கு நீங்களே விடைபகருங்கள். குடிக்கு விரோதமாய் எழும்பிப் போர்செய்ய அவசியமில்லையென்று சில போததர்மாரே நினைத்துப் பின்னிடைகிறார்களென்று நான் கேள்விப்படுகிறேன். திருச்சபையைச் சேர்ந்தவர்களிடத்தில் இந்த விஷயத்தில் உற்சாகம் வரவில்லையென்றும் கண்டறிகிறேன். இதெல்லாம் ஒழிய வேண்டும். நம்முடைய அருமையான ஆதி இங்கிலாந்து சபை இந்த விஷயத்திலே வைராக்கிய மடைந்து தன்னை வெறுத்துப் பாடு படவேண்டும், அப்பொழுதுதான் இந்தப் பொல்லாத சத்துரு அதமாகும்" என்றார். இவர் மட்டுமன்று. லண்டன் பிஷப் மதுவிலக்கு விஷயமாய் எடுத்துக்கொள்ளுகிற சிரத்தை யாவருக்குந் தெரிந்திருக்கிறது. இவர்களைப்போல எத்தனையோ ஏராளமான திருச்சபைத் தலைவர்கள் இப்போது இங்கிலண்டி லெழும்பி யிருக்கிறார்கள். நம் நாட்டிலே இவ்வித ஆவி எப்பொழுது வரப்போகிறது? இங்கும் ஐரோப்பிய மிஷனெரிகளுக்குள்ளும் சுதேச போதர்களுக்குள்ளும் மதுவிலக்கு விஷயமாய்ச் சிரத்தை வகித்துழைக்கும் உத்தமர் பலரிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிநாம் எந்தவகையிலுங் குறை கூறுவதில்லை. ஆனால் கிடைபுகுந்த ஓநாய்களுமுண்டு. அவர்களைச் சீர்திருத்து முயற்சி எப்பொழுது ஆரம்பிக்கப்போகிறது? இந்தியாவிலே கிறிஸ்துவின் இராச்சியம் பலமாய் ஸ்தாபிதமாக வேண்டுமானால் கிறிஸ்தவர்களுக்குள் நடமாடும் குடியும், அதன்மூலமாய் உற்பத்தியாகும் அசுத்தமான பாவங்களும் ஒழிய வேண்டும். இந்தப் பெரிய சத்துருவை யொழிக்கவே இப்போது கிறிஸ்து சபை குருக்கள் முயல வேண்டும். அவர்களுக்குள்ளே உற்சாகமான ஆவியை தேவன் கட்டளையிடுவாராக.

The Annual Report of the A. I. T. Association.

ஆங்கிலோ இந்தியன் மதுவிலக்குச் சங்கத்து வருஷாந்திர அறிக்கை.

ஆங்கிலோ இந்தியன் மதுவிலக்குச் சங்கத்தின் 1909-10-ம் வருஷத்து அறிக்கைப்பத்திரிகை நமது கைக்கெட்டியிருக்கிறது. அதை வாசிக்கையில் அச்சங்கம் செய்திருக்கிற அரிய வேலையின் சிறப்பைக் கண்டு சந்தோஷப்படாமலிருக்க முடியாது. ஆங்கிலோ இந்தியன் மதுவிலக்குச் சங்கம் 21-வருஷங்களுக்கு முன்னர் கண்ணியம்பொருந்திய மிஸ்டர் கேய்ன், மிஸ்டர் சாமியல் ஸ்மித் இவர்களின் முயற்சியா லுற்பத்தியாகி, கிரேட் பிரிட்டனிலும் இந்தியாவிலும் ஆசார சீர்திருத்த விருப்பமுடைய படிப்பாளிகளான பல பெரிய மனிதர்களின் நன்குமதிப்பைப் பெற்று வருகிறது. இந்த இருபத்தொரு வருஷகாலத்துள் இச்சங்கம புரிந்திருக்கிற நன்மை ஏராளமானது. சென்ற வருஷத்திலும் இச்சங்கத்தின் தளரா முயற்சியால் மதுவிலக்கு விஷயமாய் பல அனுகூலங்கள் உண்டாயிருக்கின்றன என்பதை இந்த அறிக்கைப்பத்திரிகை காண்பிக்கிறது. இப்போது இந்தப்பத்திரிகையினின்று சிலமுக்கிய குறிப்புகளை யெடுத்து நமது நேயர்களறியுமாறு ஈண்டுத் தருகிறோம். இந்த அறிக்கைப்பத்திரிகை பிரதமத்தில், சென்ற டிசம்பர் மாசத்தில் தேகவியோகமடைந்த இச்சங்கத்துத்தலைவரைப்பற்றித் துக்கித்துக் குறிப்பிடுகிறது. ரைட் ஆனரபில் லார்ட் மாங்க்ஸ்வெல் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு ஒரு வருஷ காலந்தானாகிறது. அவருக்குச் சீர்திருத்த விஷயத்திலிருந்த அபிலாஷையினாலும், இந்திய பிரஜைகள்மீது கொண்டிருந்த அன்பினாலும், தமது வாழ்நாளிலேற்பட்டிருந்த அறிவின்மிக்க அனுபவத்தாலும் இச்சங்கத்தைத் திறமையாய் நடத்தி, இதனது அநந்த நன்மைகளுக்குக் காரணராயிருந்தார். அவருடைய மரணத்தால் இச்சங்கமும் இதனுடைய ஏராளமான கிளைச்சங்கங்களும் தமது அருமையான ஆலோசனைக்கர்த்தனையும் துணைவனையும் இழந்துவிட்டதென்று அறிக்கை குறிப்பிடுகிறது. சென்ற வருஷத்தில் நிகழ்ந்த இன்னுஞ் சில பரோபகாரிகளின் மரணங்களையும் பற்றிகூறுகிறது. இந்திய ஜனங்களின் அபிவிர்த்தியை எந்நாளும் நெஞ்சில் வைத்துழைத்த டாக்டர் டாஸன் பர்ன்ஸ், மதுவிலக்கு முயற்சியில் நீங்கா சிரத்தை வகித்திருந்த பரோடா திவான் மிஸ்டர் ரோமேச சந்திரதத்தர், ரைட் ஆனரபில் ஜேம்ஸ் டாம்கின் ஆகிய இத்த மகான்களின் பிரிவைப்பற்றி விசனத்தோடு குறிப்பிடுகிறது. பின்பு சென்ற வருஷத்தில் சங்கம் செய்திருக்கிற வேலை

களை யெண்பிக்கத் தொடங்கி முதலாவது மிஸ்டர் W. S. காம்பெல் இந்தியாவுக்கு வந்து உபந்நியாசங்கள் புரிந்ததைப் பற்றிப் பேசுகிறது. நாஷனல் டெம்பரன்ஸ் லீகைச் சேர்ந்த மிஸ்டர் காம்பெல், மிஸ்டர் வில்பிரட் மெட்லாக் என்பவரோடு இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்து பம்பாய் இராஜதானி, பஞ்சாப், ஐக்கிய மாகாணங்கள், வங்காளம் ஆகிய இடங்களில் மூன்று மாதகாலம் பிரயாணம் பண்ணி மதுவிலக்குச் சங்கங்களைப் பார்வையிட்டு, படித்த இந்தியருக்கு சாஸ்திரோக்தமாய் மதுவிலக்கு உபந்நியாசங்கள் புரிந்து திரும்பிப் போனார். இவர் உபந்நியாசங்கள் செய்ததுடன், கலாசாலைகளையும், காலேஜ்களையும் பார்வையிட்டு அவைகளில் சுகாதாரத்துக்கும் மதுவிலக்குக்குமேற்ற பாடங்கள் எவ்வளவு தூரம் கற்பிக்கப் படுகின்றனவென்றும் பரிசீலனை செய்து சங்கத்துக்கு ரிபோர்ட்டு கொடுத்தார். இவருடைய உபந்நியாசங்கள் இந்தியரால் புகழ்ந்து கொள்ளப் பட்டனவென்றும், இவைகளில் நன்மை விளைந்திருக்கின்றனவென்றும் அறிக்கை கூறுகிறது. மதுவிலக்கு விஷயமாயுள்ள புஸ்தகங்கள் பிரசுரிக்கப்பட்டதைப்பற்றி கூறும்போது, சர் விக்டர் ஹார்ஸ்லி இயற்றிய "ஆல்கஹாலும் மனுஷ சரீரமும்" என்கிற அரிய புஸ்தகப் பிரதிகள் ஏராளமாய் இந்தியாவில் பங்கிடப் பட்டனவென்றும், யுனைட்டெட் கிங்டம் அலையன்ஸ் சங்கத்தார் கையளித்த "டாக்டர்களும், மதுபானமும்" என்னுந் தலைப்பையுடைய புஸ்தகப் பிரதிகள் 5000-உம் வேறு பிரதிகளும் படித்த இந்தியருக்குக் கொடுக்கப்பட்டன வென்றும் அறிவிக்கிறது. சென்ற வருஷத்தில் இங்கிலண்டில் பள்ளிக்கூடங்களில் மதுவிலக்குப் பாடங்களை ஏற்படுத்த கல்விச்சங்கத்தார் முயன்றதின் பேரில் இச்சங்கத்தின் காரியதரிசி பார்லிமெண்டு சபையில் பலகேள்விகளைக் கேட்டும் வேறு விதமாக முயன்றும் இந்தியாவில் அவ்வித ஏற்பாடுகள்செய்ய வேண்டுமென்று வற்புறுத்த பர்மாவில் பாடசாலைகளில் மதுவிலக்குப் பாடங்களேற்படுத்தப் பட்டன. இந்தியாவிலும் பல மாகாணங்களில் சுகாதார மதுவிலக்குப் பாடங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவைகள் பரிசோதனை முறையாக மாத்திர மிராமல் ஸ்திரமான ஏற்பாடாயிருக்க வேண்டுமென்று சங்கம் முயற்சி செய்கிறது. பள்ளிக்கூடங்களில் மதுவிலக்குப் பாடங்களேற்படுத்தப் படவேண்டுமோயின், உபாத்மார் அதற்குரிய திறமை வாய்ந்தவர்களாயிராமற்றீராது. ஆகையால் இந்த விஷயத்தில் கல்வியிலாகாதாருக்கு இச்சங்கம் திறமைப்பெற்ற உபந்நியாசகர்களைக் கொடுத்துஉதவிசெய்யவும் உத்தேசித்திருக்கிறது. சம்பளம் பெறுமல் இவ்வேலையை நடத்தக் கூடிய புண்ணிய புருஷர்கள் பலருண்டென்று அறிக்கை கூறுகிறது. இச்சங்க சம்பந்தமாய் இந்தியாவில் தேசபாஷையில் உபந்நியாசங்கள் செய்யக்கூடிய பலர் உண்டென்றும், அவர்கள் தங்களை வெறுத்துப் பல இடங்களுக்குப் பிரயாணஞ் செய்து உபந்நியாசங்கள் புரிந்து வருகிறார்களென்றும் அறிக்கை குறிப்பிடுகிறது. தவிர இச்சங்கத்துக்கு இந்தியாவில் 300 கிளைச்சங்கங்களுண்டு. அவைகள் தாய்ச் சங்கத்தோடு ஒத்துழைத்து வருகின்றன. இன்னும் இதோடு சேராதிருக்கிற சங்கங்கள் ஒத்துழைக்க முயற்சி நடக்கிறது. இது விஷயமாய்ச் சமீபத்தில் லாஹோரில் கூடின சர்வ இந்தியா மதுவிலக்குச் சங்கத்தில் வற்புறுத்தப்பட்டது. அச் சபைக்கு இந்தியா முழுமையிலிருந்தும் பிரதிநிதிகள்வந்திருந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்தியாவில் குடி பரவி வருவதைப் பற்றி அறிக்கை தொகை போட்டுக் காண்பிக்கிறது. இந்தியா குடியை வெறுக்குந் தேசமேயாயினும், அவர்கள் முன்னோர் பழக்கங்களைக் கைநெகிழ்ந்து மேல் நாட்டார் நாகரீகத்தைப் பின்பற்றி குடியில் கை தேர்ந்து வருகிறார்கள். 1874–75 ல் இந்தியாவில் மதுபான வரி 15,61, 000 பவுன். இந்த வருஷம் 67,17,000 பவுன். முப்பது வருஷத்தில் ஒன்று ஆறுபங்காய் பெருகிவிட்டது. 5 வருஷந்துக்கு முன்னே உள் நாட்டுச்சாராயம் 60லக்ஷம் காலன் வடிக்கப்பட்டது. இப்போது 85 லக்ஷமாகப் பெருகியிருக்கிறது. வங்காளத்தில் சென்ற ஐந்து வருஷத்தில் ஜனத்தொகை நூற்றுக்கு 2 வீதமாகப் பெருகியிருக்க, உள் நாட்டுச் சாராயம் நூற்றுக்கு 50 வீதம் அதிகரித்திருக்கிறது. 20 வருஷங்களுக்கு முன்னே இந்தியாவில் இறக்குமதியான சாராயம் 25 லக்ஷம் காலன். இப்பொழுது 80 லக்ஷம் காலன் இறக்குமதியாகிறது. இந்த ஏற்றம் இவ் வருஷத்துப் புதுவரியால் தடுக்கப்படக் கூடுமென்று அறிக்கை எண்பிக்கிறது. இப்பால் சென்னை இராஜதானியில் சாராய வரி அளவுக்கு மிஞ்சி அதிகரித்திருப்பதை அறிக்கை

குறிப்பிடுகிறது. ஒரு வருஷத்தில் நூற்று க்கு 24 வீதம் சென்னை ராஜதானியில் சாராயவரி அதிகரித்தது. சென்னை கவர்ன் மெண்டார் சாராய விற்பனையை மட்டுப் படுத்த வேண்டு மென்று அறிந்துகொண் டார்கள். ஆனால் போதுமான முயற்சி யைக் கையாடவில்லை. இப்படியிருந்தால் 35 வருஷத்துக்கு முன்னர் இந்தியா முழு மையிலும்வந்தவருமானம்இப்போது சென் னைஇராஜதானியில் மட்டும் வருகிறதென் றால் ஆச்சரியப்படுவானேனென்று அறிக் கை கூறுகிறது.

இப்பால் பம்பாய் கவர்னமெண்டு மது விலக்கு விஷயத்தில் மற்ற கவர்ன்மெண்டு களை விட கொஞ்சம் சிரத்தை யெடுத்துக் கொண்டதைச் சிலாகித்துப் பேசுகிறது. சாராயவருமானம் அதிகரித்து வருவதைக் கருதி எக்சைஸ் சட்டத்தில் சில திருத்தம் வேண்டுமென முறையிட்டு வங்காளம் சட்ட நிருபணசபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு அது சிற்சில மாறுதல் களோடு சட்ட மாக நிறைவேறினதையும், அப்படிப்பட்ட சட்டம் ஐக்கியமாகாணத் திலும் கீழ் வங்காளத்திலும் உண்டான தையும் குறிப்பிடுகிறது. இன்னும் பல அரிய விஷயங்களை இந்த அறிக்கை ப் பத்திரிகை குறிப்பிடுகிறது. அவை களெல்லாவற்றையும் இப்பொழுது நாம் எடுத்துக் கூற வசதியில்லாமையால் இன் னொருமுறையில் அதைப் பற்றி யெழுது வோம். இந்த அறிக்கையை நாம் கருத் தாய் வாசிக்கையில் ஆங்கிலோ இந்திய மதுவிலக்குச் சங்கம் புரிந்துவருகிற ஒப்ப ற்ற வேலையைச் சிலாகித்துப் பேசாமலி ருக்க முடியாது. இச்சங்கம் இந்தியாவு க்கு ஆசீர்வாத மாயிருக்கவும், இந்தியரும் இங்கிலீஷ் காரருமாகிய பரோபகாரிகள் பலர் இதிற் சேர்ந்து தேசத்தின் நன்மைக் கென்று உழைக்கவும் கடவுள் அருள் புரி யும்படி அவரை நோக்கிப் பிரார்த்திப் போமாக.

A Severe Hurricane in Italy:— ஜூலை மீ 23உ இரவு இத்தலியில் மிலன் டிஸ்ட்ரிக்டில் பலமான புசலடித்தது. அநேக கட்டிடங்கள் இடிந்து உயிர்ச் சேதங் களுண்டாயின. பல கைத்தொழில் சாலை கள் சேதப்பட்டு போயின. கோயில்கள் தகர்ந்து போயின. 50 பேர் மடிந்து, நூற்றுக்கணக்கான பேர் காயப்பட்டார்க ளெனப் படுகிறது.

The Messages Sent by the King-Emperor and The Queen Mother.

அரசனும் சக்கரவர்த்தியு மாகிய ஐந்தாம் ஜார்ஜ மன்னன் தமது இந்திய பிரசைகளுக்கனுப்பிய நற்செய்தி.

இந்திய இளவரசர்களுக்கும் சாதாரண ஜனங்களுக்கும்:—

யான் மிக்க அருமையாய் நேசித்த என் பிதாவுக்குக் காத்திராப்பிரகாரமாகவும் எவ ரும் பிரலாபிக்கும்படியாகவும் மரணம் நேரிட்டமையால் பெருமையும் பூர்வீகமா னதுமான ஓர் இராச்சிய பரம்பரையின் சுதந்தரமாக எனக்கு உரியதாகும் சிம்மாச னத்தில் யான் அரசனாகவும் சக்கரவர்த்தி யாகவும் வீற்றிருக்க வேண்டியதாயிற்று. இந்திய இளவரசர்களுக்கும், இராஜாதி காரிகளுக்கும் நமது இந்திய இராச்சியத் தில் வசிக்கும் மற்றைய குடி ஜனங்களுக் கும் யான் மங்கலவாழ்த்துக்கூறுகின்றேன். விசனிக்கப் படத்தக்க இத்துக்க சம்பவம் நிகழ்ந்த காலத்தில், ஜாதி, மதம், அனுஷ் டானம் முதலியவற்றால் வேறுபடும் பற் பல வருணத்தாரான இந்திய ஜனங்கள் காட்டிய இராச விசுவாசத்துக்காகவும் இராசகிரீடத்தைத் தரித்தவர்களின் மீது வைத்துள்ள விசேஷ பிரீதிக்காகவும் யான் மனப்பூர்த்தியாய் நன்றி கூறுகின் றேன்.

யாவராலும்மிக்க கௌரவமாய்க் கொண் டாடப்படும் "விக்டோரியா" மகாராணி 1858-ம் வருஷத்தில் இந்திய இராச்சிய பாரத்தை தாமே நேரில் வகித்தபோது, தமது இந்திய பிரசைகளுக்கும் சிற்றரசர் களுக்கும் மங்கல வாழ்த்துக்கூறி ஓர் நிரு பம் அனுப்பினர். 40-வருஷங்களுக்குப் பின்னர் அவ்வரசியின் குமாரனும், மிக்க கீர்த்திபெற்று அனைவராலும் நேசிக்கப்பட் டவருமான என் தந்தை உங்களுக்கனுப் பிய பிரசித்த பத்திரத்தின் மூலமாக அவ் விசேஷித்த சம்பவத்தை நினைப்பூட்டி யிருக்கின்றார். இவைகள் சக்கராதிபத்தி யத்தின் மேன்மையும் காருண்யமுமான நோக்கத்தை விளக்கும் சாசனங்களாம்.

அச்சாசனங்களிற் கண்ட நோக்கத்தை என் ஆயுளுள்ள நாளெல்லாம் மிக்க விசுவாசமாய்ப் பின்பற்றி யொழுகுவேன்.

இறந்துபோன மாட்சிமைதங்கிய நமது அரசரின் விருப்பத்தின்படியும், அவர் முன்மாதிரியைப் பின்பற்றியும் யான் ஐந்து வருஷங்களுக்கு முன் என் இராசபத்தினி சகிதமாய் இந்தியாவைத் தரிசித்தேன். அப்பொழுது, இதிகாசத்திற் பேர் பெற்று விளங்கிய பெரிய இராச்சியங்களையும், எங்கள் நாகரீகத்திலும் பூர்வீகமான நாகரீகத்தையும், பூர்வீக வழக்கங்களையும் ஆசாரங்களையும், சுதேச அதிகாரிகளையும், ஜனங்களையும், அப்பெருந்தேசம் முழுவதிலு முள்ள நகரங்களையும் பட்டணங்களையும், கிராமங்களையும் நேரிற் கண்டோம். அவ்வற்புத யாத்திரைகாலத்தில் எமது மனதிற்பதிந்த எண்ணங்களாவது, அவ்வியாத்திரையோடு சம்பந்தப்பட்ட சந்தோஷகரமான விஷயங்களாவது எம் முளத்தை விட்டு என்றுமகல்வது மில்லை, மங்குவது மில்லை. எனக்குமுன்னிருக்கும் மேன்மையும் கஷ்டமுமான இராச கடமைகளை நன்றாய் நிறைவேற்றுவதற்கு நீங்கள் விசுவாசத்தோடும் ஊக்கத்தோடும் உதவி புரிவீர்களென்று யான் உறுதியாக நம்புவதோடு என் ஆளுகையின் சிறப்புக்கு ஊற்றாயிருக்கும் இந்திய அபிவிருத்தி விஷயத்தில் எனக்கிருக்கும் அனுதாபத்திற்கும் தகுந்த பிரதி அனுதாபம் நீங்கள் காண்பிப்பீர்களென்றும் யான் எதிர்பார்க்கின்றேன்.

இராணி அன்னையார் தமது ஜனங்களுக்கு அனுப்பிய நற்செய்தி

எனக்கு நேரிட்ட தாங்கமுடியாத துக்கத்திலும், விபரிக்கக் கூடாத மன வேதனையிலும் உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களுமாகிய எல்லா வகுப்பினரும் காட்டிய மனதை யுருக்கத்தக்க அனுதாபத்திற்காக யான் என்னுடைய பரிதாபப் படத்தக்க நொறுங்கின இருதயபூர்வமாய்சமஸ்தஜாதியாருக்கும் நமது அன்பிற்குரிய எல்லாஜனங்களுக்கும் உண்மையான வந்தனம் கூறுகின்றேன். என் பிராணபதமான நாயகரின் மரணத்தினால் யான் எனக்குள்ள யாவற்றையு மிழந்தது மாத்திரமல்ல, சமஸ்த ஜாதியாரும் அவர்களுடைய உத்தமமான நண்பரும், தந்தையும் அரசருமாகிய அவர் சடுதியாய் இறந்தமையால் நிவிர்த்தி செய்யக்கூடாத நஷ்டத்தை அடைந்திருக்கின்றார்கள். எல்லாம் வல்ல கடவுள் தாம் நமக்கு வருவிக்கத் திருவுளங்கொண்ட இப்பெருந் துன்பத்தைச் சகிப்பதற்கு வேண்டிய பெலனைத் தந்தருள்வாராக. உங்கள் வேண்டுதல்களில் என்னையுஞ்சிறிது நினைவுகூர்வீர்களாயின், அது இனி யான் அனுபவிக்கவேண்டிய யாவற்றிலும் என்னை ஆறுதற்படுத்தி ஆதரிக்கும். யான் என் கண்மணிபோலும் புத்திரனை உங்கள் வசம் ஒப்புவிக்கின்றேன். அவர் தமது அருமையான பிதாவைப் பின்பற்றி நடப்பார் என்பதிற் சந்தேகமில்லை. அவருடைய அருமைப் பிதாவிடத்தில் நீங்கள் எவ்வளவு பக்தியுடையவர்களா யிருந்தீர்களோ அவ்வளவு பத்தியுடையவர்களாய் அவரிடத்திலுமிருக்கும்படி மிகவும் வேண்டிக்கொள்ளுகின்றேன். என்னுடைய அருமையான புத்திரனும் மருமகளும் நீங்கள் காட்டும் அன்புக்குரியவர்களாய் நடந்து கொள்ளத் தம்மாற் கூடிய அளவு பிரயாசப்படுவார்களென்பதை யான் அறிவேன்.

Anecdotes.

சிற்றுதாரணக் கதைகள்.

விசுவாசத்தைக் கடந்து விட்டது.

கிராம சபையின் போதகர் ஒருவர் ஒரு நாள் காலை ஆராதனையில் கர்த்தர் மழையைக் கட்டளையிட வேண்டுமென்று உருக்கமாய் ஜெபித்தார். அவர் பிரசங்க பீடத்தை விட்டுக் கீழே யிறங்கி வருகையில் கோயில் ஊழியக்காரன் எதிர்கொண்டு போய் "ஐயரே மழை பலமாய்ப் பெய்கிறது" என்று சொன்னான். அப்போது போதகர் "அப்படியா, நான்நினைக்கவில்லையே ; காலையிலே வரும்போது குடை கொண்டு வர வில்லை" என்றார்.

சிலவற்றைத் தபாலில் அனுப்பினான்.

ஒரு போதகர் குடித்துவிட்டிருந்த ஊழியக்காரனைப் பார்த்து "ஜான், என்ன நீ இந்த அவமானமான நிலைமையிலிருக்கிறாய் ?" என்றார். ஜான், "ஐயா, தாங்கள் கொடுத்த அழைப்புக் கடிதங்களைச் சபையாரிடங் கொண்டுபோனபோது, போன இடத்தில் ஒவ்வொருவரும் கொஞ்

சம் குடித்துப் போகக் கேட்டுக்கொண்டார்கள். இது அதிக வெறியை யுண்டாக்கி விட்டது" என்றான். போதகர் ஆச்சரிய முற்று, "நம்முடைய சபையில் குடியாத பேர்வழிகளில்லையா?" என்றார். ஜான், "ஆம் ஐயா உண்டு; அவர்களுக்கெல்லாம் அழைப்புக் கடிதங்களைத் தபாலில் அனுப்பி விட்டேன்" என்று சொன்னான்.

திறமையான மறுமொழி.

சிறந்த போர்வீரனும் பிரஞ்சுக்காருடைய சக்கிரவர்த்தியுமாகிய நப்போலியன் போனபார்ட் குஜோத்தியத்தின்மேல்பிரியமுடையவரும், யுக்தியான விடைகளைச் சன்மானிக்கிறவருமாம். ஒருநாள் அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற ஒரு பெண்பிள்ளை பாடசாலையைப் பார்க்கச் சென்று, அங்கே விளையாட்டாய் ஒரு சிறுமியைப் பார்த்து "ஒரு உட்சொக்காய் தைக்க எத்தனை ஊசி நூல் வேண்டும்?" என்று ஒரு கேள்வி கேட்டார். புத்திக்கூர்மையுடைய அந்த பாலிகை "ஐயா, நீளமாய் நூல் கோத்துக்கொண்டால் ஒரு ஊசி நூல் போது"மென்றாள். அந்த விவேகமான விடையைக் கேட்ட சக்கிரவர்த்தி பெருமகிழ்ச்சியுற்று அந்தப் பெண்பிள்ளைக்கு ஒரு பொற் சங்கிலி பரிசளித்துப்போனார்.

The Book Review.

இரக்ஷண்ய தியானப் பாமாலை.

இப்பெயரிய சிறுபுத்தகமொன்று இதன் ஆசிரியர் கனம் A. J. தம்புசுவாமிப்பிள்ளையவர்களால் எமது பார்வைக் கனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. முழுமையும் நேரிசை வெண்பாக்களா லாகிய இப்புஸ்தகத்தை நாம் வாசித்துப் பார்த்ததில் சொல்லும் பொருளும் செவ்வனே அமைந்து நல்ல நடையுடையதாயிருக்கிற தென்பதைக் கண்டு சந்தோஷித்தோம். நமது ஆண்டவருடைய ஜீவியம், மரணப்பாடுகள் உன்னதசெயல்கள் இவைகளையும், கிறிஸ்தவர்க்குப் போதனையான ஜெபம் மன்றாட்டு ஒப்படையாதி விஷயங்களையும் இச்சிறு நூல் தியான ரூபமாக அடக்கிக் கொண்டிருக்கிறது. பாஷைநடை அரிதன்றாயினும் செந்தமிழ் நயம் பொருந்தியுளது. இது கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறோம். புஸ்தக விலை அணா 3. சென்னை ஆல் பிரட் எங் கம்பெனியிலுள்ள இதன் ஆசிரியரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Temperance Notes.

மதுவிலக்குக் குறிப்புகள்.

Women Drink Slaves:—சில நாட்களுக்கு முன்னர் லண்டன் மார்ல்பரோ வீதியில் ஒரு ஸ்திரீ திருடினதாகக்குற்றஞ் சாட்டப்பட்டு ஒருமாத கடினகாவல் சிக்ஷை விதிக்கப்பட்டாள். இரண்டொரு நாட்களுக்குப் பிந்தி அவளைத்தண்டித்த நியாயாதிபதிக்கு அவளுடைய கணவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவன் எழுதியிருந்ததாவது:—"என் மனைவிக்கு நேரிட்டதைக் குறித்து மிகவுந் துக்கிக்கிறேன். அவளுடைய குடி பழக்கத்தினாலேயே இந்தக் கஷ்டம் நேரிட்டது. பல வருஷமாய் அவளைச் சீர்திருத்தமுயன்றும் என்னால் கூடாமற் போயிற்று. இந்தப் பக்கத்தில் ஸ்திரீகளுக்குள்ளே குடி கொடுமையாய்ப் பரவியிருக்கிறது. சாராயக் கடைகள் ஏராளமாயிருக்கின்றன. அவைகளே அவர்களுடைய வீடாயிருக்கின்றன."

A Cardinal Condemns Drink:—சமீபத்தில் ஐர்லாந்தில் டன்டாக் என்னுமிடத்தில் கூடின மதுவிலக்கு மகாஜனக் கூட்டத்தில் கார்டினல் லோக் என்கிற உரோமன் கத்தோலிக் குருவானவர் மதுபானத்தைப் பற்றிச் சொன்னதாவது:—"ஒருவன் மேன்மையும் மகிமையும் பொருந்திய தன் மனுஷீக குணதிசயங்களைப் போக்கடித்துக்கொண்டு, தன் சரீரத்தையும் மனதையும் அழிப்பதோடு நில்லாமல் தன்னுடைய வாழ்நாளின் சுகிர்தங்களையும் பிற்கால ஸ்திதியின் மகிமையையும் அறவே நிர்மூலஞ்செய்கிற மகா கொடிதானபாவகாரணமாகிய மதுபானத்தை யருந்தி அதில் ஆனந்தமுறுவது எவ்வளவு அநுசிதமும், அவமானமு மென்னலாம். மதுபானம் ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்க வல்லது; குடும்பங்களைச சீர்குலையச் செய்வது. இதனால் விளையும், அநர்த்தங்களையும், துன்பங்களையும் சீர்தூக்கிப்பார்க்கும் எந்த மனுஷனும், இந்தக் கொடிய சத்துருவையில்லாம லாக்கப் பிரயாசை யெடுத்

துக்கொள்ளாமலிருக்கமாட்டான். குடியன் தன் உலக வாழ்வின் மேன்மையை யிழந்து போவது மாத்திரமன்று; எல்லாம் வல்ல கடவுள் அவனுக்காக வைத்திருக்கிற அழியாத நித்திய வாழ்வையும் போக்கடித்துக்கொள்ளுகிருன். நமது ஆண்டவர் தாமே வெறியன் பரலோக ராச்சியத்தில் பிரவேசிப்பதில்லையெனத் திருவுளம் பற்றியிருக்கிருர். அவர் வார்த்தை ஒருகாலும் பொய்த்துப்போவதில்லை."

The Medicine of Fools:—சௌத்வார்க் மேயர் ரெவரண்ட் கானன் ஹார்ஸ்லி மதுபானத்தைப் பற்றிக் கூறும் சாக்ஷி:—"ஆல்கஹால் மூடர்களின் மருந்து; அறிவீனரின் அவபக்தி; செழிப்புக்கும் அபிவிர்த்திக்கும் சர்வலோக இடையூறு; நமது ஜாதியாரின் சத்துரு."

Prohibition in Patiala.—பட்டியாலா சமஸ்தானத்துள் 18 வயதுக் குட்பட்ட எந்தப் பிரஜையும் லாகிரித் தரத்தக்க மதுபானமாவது, புகையிலையாவது அருந்தக்கூடாது; மீறிச் செய்தால் 15 நாள் சிறையும் அபராதமும் விதிக்கப்படும்; மேற்படி வயதுக்குட்பட்டவர்களுக்கு லாகிரி வஸ்துக்கள் விற்போரும் ஒருமாத கடினகாவல் சிக்ஷை பெறுவர் என்று சமீபகாலத்தில் அந்த மகாராஜா சட்டம் பிறப்பித்திருப்பதனுல் அமிர்தசார் மதுவிலக்குச் சங்கத்தார் மகாராஜாவுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்திருக்கிருர்கள்.

Drink among the Khonds:—ஜூன் மீ 21௳ பார்லிமெந்து காமன்ஸ் சபையில் வங்காளம் காண்ட் ஜில்லாவில் மதுபான லைசென்ஸ் விஷயமாய் ஜனங்கள் செய்து கொண்ட முறைப்பாட்டை விசாரிக்கும்படி அந்தக் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிருர்களே, அந்த விசாரணையின்முடிவையும், அதன்மேல் கவர்ன்மெண்டார் செய்ய உத்தேசித்திருக்கும் காரியத்தையும் தெரிவிக்கக் கூடுமா என்று சர் ஹெர்பர்ட் ரூபர்ட்ஸ் இந்தியா உப மந்திரியைக் கேட்டார். அதற்கு மிஸ்டர் மாண்டேகு கொடுத்த மறுமொழியாவது:—1910ஆ பெப்ரவரிமீ 16௳ கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையில் அதுவிஷயமாய் வெளியான கடிதத்தையும், விஷயத்தையுந் தவிர வேறொரு சங்கதியும் உத்தியோக வாயிலாய் இந்தியா மந்திரிக்கு வரவில்லை. அதைப்பற்றி வங்காள கவர்ன்மெண்டார் ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டுமென்று எழுதிக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.

New President of the A. I. T. Association:—ஆங்கிலோ இந்தியன் மதுவிலக்குச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்து காலஞ்சென்றரைட் ஆனரபில் லார்ட் மாங்க்ஸ்வெல் ஸ்தானத்தில், பார்லிமெண்டு மெம்பர்களி லொருவராகிய சர் ஹெர்பர்ட் ரூபர்ட்ஸ் தெரிந்து நியமிக்கப்பட்டிருக்கிருரெனக் கேட்டுச் சந்தோஷிக்கிரோம். இவர் மதுவிலக்கு முயற்சியில் விசேஷ சிரத்தையுடையவர். இவர் நியமனம் சகலருக்கும் திருப்தியைத்தரத்தக்கது.

Indian Councillors and Temperance:—இந்தியாவில் மாகாண சட்ட நிரூபண கவுன்ஸில்களில் அங்கங்களாயிருக்கிற மூன்று கனவான்கள் மதுவிலக்கு முயற்சி விஷயமாய் வெளியிட்டிருக்கிற அபிப்பிராயங்களை இங்கு குறிப்பிடுகிரோம்:—

ஆனரபில் மிஸ்டர் கோகுலதாஸ் பரேக் (பம்பாய்):—"ஜனங்களின் சன்மார்க்கத்துக்கும் அறிவுக்கு மடுத்த காரியங்களைப் பலப்படுத்தி தேசத்தின் தொழின் முயற்சியையும் செல்வச் சீரையும் விர்த்திசெய்ய மதுவிலக்கு முயற்சி சிரேஷ்டமான கருவியென்பதை நன்குணர்ந்திருக்கிறேன். இம்முயற்சிக்காக என்னுல் இயன்ற உதவியை மகிழ்ச்சியோடு எப்போதுஞ் செய்வேன்."

ஆனரபில் பாபு தேவப்பிரசாத சர்வாதிகாரி (வங்காளம்):—"குடியென்னுந் தீமை தேசத்தின் உத்கிருஷ்டமான உயிரைப் பீடித்துவருகிறது. சித்த சுவாதீனமுள்ள எந்த மனுஷனும் தூரத்தில் நின்று இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது."

ஆனரபில் கங்காபிரசாத வர்மா (ஐக்கிய மாகாணங்கள்):—"ஆலோசனை சங்கத்தில் மதுவிலக்கு முயற்சி விஷயமாய் என்னுல் ஏதேது செய்யக் கூடுமோ அதையெல்லாஞ் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்."

General News and Notes.

பொதுவர்த்தமானக் குறிப்புகள்.

Cholera in Benares.—காசிப் பட்டணத்தில் விஷபேதி வெகு மும்முரமாய்ப் பரவி வருகிறதாகச் சங்கதி யெட்டுகிறது. நாளுக்கு நாள் இக்கொடியநோய் அதிகரித்து வருகிறதாம்.

Priests' Quarrel:—கல்கத்தாவில் காளி கட்டம் இந்து ஆலயத்தில் இரண்டு அர்ச்சகர்களுக்குள் 19வ விவாதமுண்டாயிற்று. ஒருவன் மற்றவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்திருந்தான். அதைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்க, கடன் பட்டவன் கொடுக்க மாட்டேனென்றான். இதன் மேல் கடன் கொடுத்த அர்ச்சகன் மூர்க்கங் கொண்டு அவனைக் கத்தியால் குத்திவிட்டான். காயப்பட்டவன் ஆஸ்பத்திரியிலும், கைபதறிவன் காராக் கிரகத்திலு மிருக்கிறார்கள்.

A Japanese Steamer Sunk:—கோபியிருந்து டால்னிக்குப் பிரயாணப்பட்டுப் போய்க் கொண்டிருந்த "டெஸமரிமாரு" என்கிற ஜப்பானிய பிரயாணிகள் கப்பல், கொரியன் சமுத்திர தீரத்துக்கப்பால் 246 பிரயாணிகளுடன் சமுத்திரத்தில் முழுகி விட்டதென்று டோகியோவிலிருந்து தந்தி செய்தி வந்திருக்கிறது. 40 பேர் மாத்திரம் காப்பாற்றப்பட்டனராம். மற்றவர் போனவழி தெரியவில்லை. ஒரு யுத்தக்கப்பல் உதவிக்குப் போயிருக்கிறது.

A Present to Burma Buddhists:—பர்மா புத்தமத தலைவர்களுக்கு கவர்ன்மெனறாரால் வெகுமதி செய்யப்பட்ட வெள்ளை யானைக்குட்டி ஜூன்மீ 23வ இரங்கூன் ஸ்டேஷனில் வந்திறங்கினது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதைப்பார்க்கக் கூடியிருந்தார்கள். புத்தமத அதிகாரிகள் நாற்சக்கரமுள்ள ஒரு பெரிய ரதத்தை நன்றாய்ச் சிங்காரித்துக் கொண்டுவந்து அதில் அந்த யானையை யேற்றி பெரிய வீதிகளின் வழியாய்த் தங்கள் ஆலயத்துக்கு அதைக்கொண்டுபோனார்கள். ஸ்திரீ புருஷர் பிள்ளைகளெல்லாரும் மிகு குதூகலத்துடன் வடம்பிடித்து அந்த இரதத்தை யிழுத்தார்கள். ஜனங்களுக்குள் பெருத்த ஆரவாரமுண்டாயிருந்தது. கோவிலில் அந்த யானைக்கென்று ஒரு விடுதி கட்டி தகுந்த சடங்குகளோடு அதை குடியேற்றப் போகிறார்களாம்.

Publication of Seditious Matter:—லாஹோரில் "குவாகி இஸ்லா" என்கிற இரண்டு புஸ்தகங்களை வெளிப்படுத்தின நந்தகோபால் இராஜ துரோகவிஷயங்களை அதிலெழுதினதாய்க் குற்றஞ் சாட்டப்பட்டு ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விசாரணையாகி 5 வருடம் தீவாந்திர சிக்ஷை பெற்றான். இதன்மேல் மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய அத்தண்டனை காயமாக்கப்பட்டது. இதோடு 'சுவராஜ்ய' கேஸில் நந்தகோபாலுக்கு 5 வருஷ தீவாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கிறது.

An Intended Child Sacrifice:—பிற்கூறியவிஷயம் "பசுமதி?" என்கிற வங்காளி பத்திரிகையில் வெளியாயிருக்கிறது:—மைமன்சிங் டிஸ்ட்ரிக்டில் ஜகத்தல் என்னுமூரில் பரத் சந்தர் தேவ் என்று ஒருவனிருக்கிறான். அவன் காளிபூசை செய்பவன்; தன்வீட்டிலேயே விக்கிரகம் வைத்துக்கொண்டிருக்கிறான். ஒருநாள் ராத்திரி காளி அவனுக்கு முன் வந்து அவனுடைய பேரப்பிள்ளையாகிய இரண்டு வயது குழந்தையைத் தனக்குப் பலி செலுத்தும்படி ஆக்கியாபித்ததாக கனவு கண்டானும். அதே இரவில் அக்குழந்தையின் தாயும் அப்படியே கனவு கண்டாளாம். இதன்மேல் குழந்தையை பலியிடத்துணிந்து சர்வ யத்தனங்களும் செய்து பலியிடப் போகிற சமயத்தில் போலீஸாருக்குச் சங்கதி தெரிந்து வந்து அவர்களைக் கைதுசெய்து மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். பரத் சந்தர் உண்மையை ஒளியாமற் சொல்லியிருக்கிறான். குழந்தை தக்க பாதுகாப்பிலிருக்கிறது.

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப் பத்திரிகை தமிழ் எடிட்டரிடங் கிடைக்கும். 1½ அணா லேபில் அனுப்பிப் பெற்றுககொள்க.